
# ஆத்ம ஜோதி



சுத்தசக்தி அருளால் சுத்தானந்தப் பேரோன்
நித்தமும் உறைவான் இங்கு.

ஓம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

சோதி 5 | நந்தன வருடம் கார்த்திகை மாதம் 15ங்வ | சுடா 1

## பொருளடக்கம்.


| | |
|---|---|
| சுத்தானந்தத்திருப்புகழ் ... ... | 1 |
| உரிமையுண்டு ... ... | 2 |
| நேயர் வாரீர் ... ... | 3 |
| சுத்தானந்தர் வருகை ... .... | 5 |
| ஒளியும்—ஒழுக்கமும் ... ... | 6 |
| கவியோகியைக்கண்டேன் .... ... | 8 |
| பொறுக்குமணிகள் ... ... | 9 |
| வரவேற்புப்பாமாலை .... ... | 11 |
| சுத்தானந்தர் இலங்கை விஜயம் .... .... | 13 |
| உள்ளமும்—உடலும் ... ... | 23 |
| சக்தியைபெறும்வழி ... .... | 25 |
| சுத்தானந்தரின் யாழ்ப்பாண நிகழ்ச்சித்திட்டம் ... | 28 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்,

ஆயுள் சந்தா ரூபா 75/- மாதசந்தா ரூபா 3/- தனிப்பிரதி ச. 30
ஆத்மஜோதி நிலயம். நாவலப்பிட்டி, (இலங்கை)

கௌரவ ஆசிரியர்: க' இராமச்சந்திரன்
நம் 60 டீல் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதி நிலயம் நாவலப்பிட்டி

ஓம் சுத்த சக்தி



# ஆத்ம ஜோதி

## சுத்தானந்தத் திருப்புகழ்

"நாதவிந்து கலாதி நமோநம" என்ற மெட்டு

வேத வித்தக வீரா நமோநம
பூத மைந்தனே வென்றய் நமோநம
ஞான பண்டித மூர்த்தி நமோநம மயிலேறும்
வீர வேல் வடி முருகா நமோநம
தூய சுத்தா னந்தா நமோநம
மாய உலகை வென்றய் நமோநம மலர்வாசா

கோத மில்லாக் குணநிதி நமோநம
கீத மின்னிசை வல்லாய் நமோநம
தீர ஞானிகள் வீரா நமோநம திருவாளா
தீப ரமண பாதா நமோநம
தூய அரவிந் தலீலா நமோநம
தேவ ஜடாதர பாலா நமோநம அருள்தாராய்

வேத மோதலும் விளங்கு தியானமும்
காதலுங் கன ஆசார நீதியும்
ஈழமுங் குருசீர் பாத சேவையும் மறவாத
பூதலம் புகழ்கா மாட்சி யார்மகன்
மோன முனிவரின் மு தன்மைச்சீடன்
சேயி ளமம் செல்லமா யுடைய செவ்வேளே

ஆதாம் பயில்அம் மானின் வன்பினல்
அம்பிகை சரணம் அடைக்கலம் புகுந்து
ஐந்து வயதினில் அருங்கவி பாடிய கவிவாண
எழ்நலம் புகழ் ஈழ நாட்டிடை,
எல்லாரு மோர்குலம் என்று சாற்றியே
சன்மார்க்கப் பணி புரியு மெந்தன் குருதேவே.

[முத்து]

# உரிமையுண்டு.

மாண்டு — ரூபகம்

உரிமை யுண்டு—உரிமை யுண்டு
உலகிலுள்ள யாவர்க்கும்
பிரிவிலாது துயரிலாது
பெருமையாக வாழவே [உரி]

மனிதனுக்கு மனிதன் எந்த
வகையிலும் இழிவின்றிப்
புனிதமான தொண்டு செய்து
புலமை கொண்டு வாழவே [உரி]

பஞ்ச மின்றி நோய்க ளின்றிப்
பாப மின்றித் தீயரின்
வஞ்ச மின்றி லஞ்ச மின்றி
வறுமை யின்றி வாழவே [உரி]

கட்டு மின்றிக் கவலையின்றிக்
காவலின்றி யாவரும்
சட்டமின்றித் தூயநெஞ்சச்
சாட்சி பற்றி வாழவே [உரி]

காணும் சக்தி—சிவனைப் போலக்
காதல் வாழ்வில் ஒன்றிய
ஆணும் பெண்ணும் தேசமெங்கும்
அங்கை கோத் துலாவவே [உரி]

அடிமை செய்யும் சட்டம் ஒழிய
ஆண்மை கொண்டு மீறுவோம்
துடிதுடிக்கும் வீறு கொண்டு
துணிவுடன்முன் னேறுவோம் [உரி]

சொல்லும் ஆயு தங்கள் நாணக்
கோபத்தீ அணையவே
வெல்லும் ஆத்ம சக்தியுண்டு
விடுதலை உறுதியே [உரி]

சுத்தானந்த பாரதி

# நேயர் வாரீர்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

என் உள்ளத்திற்கு மிக்க மகிழ்ச்சி தருவது இலங்கை; நான் பல நாடுகளைச் சுற்றிச் சன்மார்க்கத் தொண்டு பரவினேன். இலட்சக்கணக்கான மாந்தரைக் கண்டேன்; நூற்றுக்கணக்கான கூட்டங்களிற் பேசினேன். எத்தனையோ யோக சாதனவகுப்புகள் நடத்தினேன்.—எனினும் இலங்கையின் ஆர்வம் எங்குங்காணேன்—சுத்தசிவ சன்மார்க்கக் கொடியை நாட்ட ஓர் அன்புக் கோவில் உண்டானால் அஃது இலங்கையே.

இன்றுலகம் இருள் மூடுண்டிருக்கிறது; அதில் ஒளி விளக்கவேண்டும்; இன்றுலகோர் பிரிந்து வாழ்கிறார்கள்; அவர்களை ஒன்றி வாழச்செய்யவேண்டும். சாதிமத சாத்திரகோத்திரவேறுபாடும் மேற்கு கிழக்கு என்னும் வேறுபாடும் நீங்கி வானக்குடைக்கீழ் எல்லோரும் ஒரே குலமாக வாழவேண்டும்; வாழமுடியும். சைவர், வைணவர், வேதாந்திகள், சித்தாந்திகள், பௌத்தர், சமணர், கிறிஸ்துவர், இஸ்லாமியர், எல்லோருஞ் சேர்ந்து வாழலாம். வழியுண்டு. அதற்கு ஒரு சுத்தசங்கம் கண்டு, அங்கே திருத்தொண்டரைப் பயிற்றி அருட்பணி தொடங்கவேண்டும். பத்து ஏக்கர் நிலத்தில் தியானமந்திரம் அமைத்து விரிவாகப் பணி செய்யவேண்டும்.

**கதிர்காம முருகேசன் அருளிச்சை வெல்க!**

மலைநதி யழகு சூழ
மங்கல வியற்கை சூழக்
கலைபெறும் அறிஞர் சூழக்
கனிவுறும் அன்பர் சூழத்
தலைபெறு சுத்த சக்தி
தழைத் துலகோன்று சேர
நிலைபெறு சங்க மொன்று
நிறுவுவோம் நேயர் வாரீர்.

தேம்பழஞ் சோலை சூழத்
தியான மந்திர மெழுப்பிச்
சோம்பலும் துயரு மற்ற
சுதந்தர வீறு பெற்றே
ஓம்பரஞ் சோதி சக்தி
ஒளிபெறத் தவங்கள் ஓங்க
நாம்பயில் சுத்த சங்கம்
நாட்டுவோம் உலகினீரே!

புத்தரின் கருணை யுள்ளம்
கிறிஸ்துவின் புனிதத் தொண்டு
பத்திசேர் நபியின் வீறு
பரம வேதாந்த ஞானம்
சத்திசேர் சித்தாந் தத்தைச்
சாதனஞ் செய்து செய்து
சுத்த யோகத்தின் வீர
தீராய்த் துலங்க வோமே!

மனமொழித் தூய்மை வாய்மை
மாசிலா ஆன்ம நேயம்
தினமணி போன்ற சாந்தம்
தெள்ளிய நதிபோல் வாழ்க்கை
இனமணி மலர்போல் இன்பம்
எழில்பெறு தவத்தின் சக்தி
அனைவரும் பெறலாம் வாரீர்
அன்புல , காக்கு வோமே.

ஊனிடைச் சிறைப்பு குந்தே
உறுதுயர் சுமந்து நோகும்
மானிட வாழ்வை நல்ல
மங்கள வீணை யாக்கி
நானெனச் சுதி யியக்கி
அவனெனு நாத மாக்கித்
தேனெழு மிசை யினலே
சிவம் எழச்செய்வோம் வாரீர்



தேகத்தை வருத்து கின்ற
தீவினை தீர] வேண்டி
யோகத்தால் உள்ளம் ஒன்றி
ஒருமையால் உலகை நோக்கி
ஏகத்தால் இனிய நன்மை
இயற்றுவோம் சுத்த சக்தி
போகத்தால் மண்ணும் விண்ணும்ப்
பொலிந்திட வளங்க ளெல்லாம்.

## ஸ்ரீசுத்தானந்தர் வருகை

தேவே வருக திருத்தேவி சேயே
வருக தெவிட்டாத
தேனே வருக சுவை யமுதத்
தெளிவே வருக கதிகொடுக்குங்
காவே வருக பெருங்கருணைக்
கடலே வருக கலைபொழியுங்
காரே வருக மரகதத்தின்
கண்ணே வருக யோகசித்திக்
கோவே வருக பெரியகுணக்
குன்றே வருக வுபதேச
குருவே வருக சிவஞானக்
கொழுந்தே வருக பாரதசக்தியின்
பாவே யருளிய பரமயோகி
உருவே வருக அடியார்கள்
வாழ்வே வருக சுத்தானந்த
மணியே வருக வருகவே!

(சுத்தானந்ததாசன்)



ஓம் சுத்த சக்தி

# ஒளியும்—ஒழுக்கமும்.

[யோகி]

—

முறையான நல்லொழுக்க வாழ்வினுல்உள்ளம் ஒளி பெறும்; அகத்தொளி முகத்தில் விளங்கும். மனங்கோண முகங் கோணும்; மனம் மலரமுகம் மலரும். காமம் வெகுளிகலக்கமற்ற தூயமனம் மாசற்ற கண்ணுடியைப்போன்றதாம். அதனூடு ஆன் மவொளி நிலவும் அவ்வொளிக்கதிரே, தேஜஸ், ஓஜஸ், வர்ச்சஸ், எழில், சாந்தி எனப்படுவது.

ஆள், அண்டங்காக்கையாயிருந்தாலும், இந்த ஆத்மதேஜ ஸால் ஒருவன் புதிய அழகும், பொலிவும் பெறுவான். வெறுங் கோலழகிற்கும் இதற்கும் வேற்றுமையுண்டு. சாயம்பூசி, பொய்ப் பல் நகைத்து, அணி மணி மினுக்கும் மேலழகு போலியழகே. அணிமணியின்றி விண்மணியொளிர்வதுபோல, உள்ளழகுமேலழ கின்றியே பொலியும்.

கெட்டவசிக்கனை செய்யாமல்,தெய்வத் தன்மையுள்ள பெரியாரை எதிர்த்து வாதாடாமல், பொய் சொல்லாமல் நடந்தால்ஒருவனுக் குப் புகழாகும். ஒவ்வொருநாளும் இரவில்படுக்குமுன்பு, அன்று செய்த குற்றத்தை நினைத்து வருந்தி, மனச்சாட்சியான தருமதே வதையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும். காலையில் அக்குற்றத்தைச் செய்வதில்லை என்ற உறுதியுடன் மாசற்றவ னுக எழுந்திருக்கவேண்டும். நன்னடை வளர்க்கும் வழியிதுவே, மனிதன் சுரங்கக்கட்டி; அதை மாற்றுயர்ந்த தங்கக் கட்டியாக்க வேண்டும். அதற்கு அதை நல்லொழுக்கம் என்னும் உலையில் உருக்கியுருக்கித் தூய்மையாக்கவேண்டும்.




இந்த எண்சாண் மனையில்,எத்தனையோ குறைகளும், பிணிகளும் குடிபுகுந்துள்ளன. தன்னலம், வஞ்சனை, ஆசை, ஆணவம்அழுக் காறு, பொய். பகை, காமக்குரோதாதிகள்முதலிய ஆயிரக்கணக் கானகுற்றங்குறைகள் நிறைந்தஇந்த மானிடவாழ்வைநாடோறும் மாசறுக்கவேண்டும். ஒழுக்கமென்னும் உளியாற் செதுக்கியே உயி ரோவியத்தை ஒளிபெறப் பொலிவிக்கவேண்டும். நாட்குறிப்பு கள் எழுதிவருக! கண்விழித்தெழுந்ததுமுதல் கண்மூடியுறங் குமட்டும் செய்தவை, நினைத்தவை, சொன்னவைகளில் உள்ள நன்மை தீமைகளையெல்லாம் எழுதி வருக!

"இன்று, இன்ன குற்றம் செய்துவிட்டோம். ஏன் செய் தோம்? சை, நாளை அப்படிச் செய்யக்கூடாது, என்று உறுதி கொள்ள வேண்டும். இன்று ஒருவர்மேல் பொய்கட்டிவிட்டிருந் தால், இரவில் வருந்தி மறுநாள் யார்மேல் பொய் கட்டி விட்டோமோ அவரிடம் சென்று, "நான் நேற்று இன் னபிழை செய்துவிட்டேன், மன்னிக்கவேண்டும்; இனிக்கவன மாக நடந்துகொள்கிறேன்" என்று தைரியமாகச் சொல்லவேண் ண்டும் அதனுல் இருவருக்கும் நட்பாகும். குற்றங் குறையும், மறைந்தகுற்றம்மனத்திற்குடையும். ஒப்புக்கொண்டவன் தப்பிக் கொண்டவன். மனமாகிய செப்புப் பாத்திரத்தைக் களிம்புபிடிக் காமல் தினம் தூயவொழுக்கங்களால் தேய்த்துக் கொண்டேயிரு க்கவேண்டும். சாலைக்கடன்களைக் கருத்துடனே செய்க!

முகத்தில் விளங்கும் முறையான வாழ்வால்
அகத் தொளிரு மான்ம வழகு:

## தியான மலர்.

தேவீ! நான் குழந்தைபோல் உன்னையடைந் தேன். என்னையேற்றுப் பரிபூரணமானகுழந்தையா க்கு. உனது பக்திக்கனலைத்தந்து உனது இச்சையை நிறைவேற்றவே வாழ அருள்! தேவீ! உனது இக் கருவியின்மூலம்செயல்புரிக! தேவீ! உனதுஉண்மை ஒளியை எனக்குக்காட்டு- உன்னருளால்தான் உன் னைக் காணவேண்டும். என்சிறுமதியைஅடக்கி உன் னிச்சை எளியேனை இயக்குக.



ஓம்

# கவியோகி பாரதியைக் கண்டேன்.

ச. ஆறுமுகநாதன்

அன்பொளிரும் திருமுகத்து அண்ணலினைக் கண்டேன்
அருளிதயத் திருவடிவின் அறிஞரினைக் கண்டேன்
பொன்னொளிரும் பொறுமைமிகு புலவரினைக் கண்டேன்
புத்தமுனி கருணைபொழிப் போதகனைக் கண்டேன்
இன்னலுற்று மக்களுக்காய் சிலுவையிலே மாண்ட
ஏசுபிரான் இதயத்தின் எதிரொலியைக் கண்டேன்
தன்னுயிரை மானுக்காய் பிணையிட்ட ஞான
தவக்கொழுந்தாம் நபிகள்திரு தத்துவத்தைக் கண்டேன். [1]

சித்தாந்த வேதாந்த சிறப்பதனைக் கண்டேன்
தீந்தமிழின் அறவுரையின் செழுமையினைக் கண்டேன்
முத்தான மணித்தமிழின் மூலப்பொருள் கண்டேன்.
முன்னேற்றக் கேசரியின் முழக்கமதைக் கண்டேன்
சுத்தானந்தக் கதிரின் சுடரொளியைக் கண்டேன்
தூயஉள்ள விஞ்ஞானப் பெரியாரைக் கண்டேன்
நித்யானந் தக்கதிரின் நேசவொளி கண்டேன்
நீதியொளி செய்ஞான சோதியினைக் கண்டேன் [2]

தமிழ்க்கடலில் குளித்தெழுந்த தவமுனியைக் கண்டேன்
சமதர்மப் பேரொலியின் சக்தியினைக் கண்டேன்
அழகான தமிழ்நாட்டின் அடிகளினைக் கண்டேன்
அனைத்துயிரும் தம்முயிராய் நினைப்பவரைக் கண்டேன்
சமயங்களைந்தினையும் சமமாக எண்ணும்
தமிழ்க்கனலாம் புதுவைவாழ் தவச்சுடரைக் கண்டேன்
அமைதியுடன் உலகெல்லாம் ஒற்றுமையாய் வாழ்க
அன்பெனும் அமுதூட்டும் அன்னையினைக் கண்டேன் [3]

கவிக்குயிலை தமிழ்க்கலையின் காவலனைக் கண்டேன்
கருணைபொழி வான்முகிலின் காட்சியினைக் கண்டேன்
செவிக்கினிய விருந்தூட்டும் செந்தமிழைக் கண்டேன்
சீர்திருத்த சிற்பியரின் செயல்உயர்வைக் கண்டேன்
புவிக்கினிய வழிகாட்டும் புனிதரினைக் கண்டேன்
பொங்கியெழும் புதுநிலவின் புன்னகையைக் கண்டேன்
தவமுமாயப் பற்றறுத்த தவமுனியைக் கண்டேன்
தமிழ்தந்த தவயோகி பாரதியைக் கண்டேன் [4]

ஓம்

# பொறுக்கு மணிகள்

அன்பருக்குத் தோன்றியும் மறைந்தும் துணைபுரிகிறான் பரமன். உயிர்க்குலமெல்லாம் அவனது அருட்குலம், அன்புச்செய்கள். அவன் தந்தை, அவனது சக்திதாய்,

❁ ❁ ❁ ❁ ❁

ஆண்டவன் அருளழகனாகி அன்பரைக் காக்கின்றான், உருத்திரக்காளியாகித் தீயரை நசுக்குகிறான். ஒரு கையால் அபயந்தருகிறான்; மறுகையில் அனல் ஏந்துகிறான். சிற்சபையில் திருநடம்புரிகிறான். சுடுகாட்டிலும் கூத்தாடுகிறான்.

❁ ❁ ❁ ❁ ❁

கதிரவனின்றிக் கதிர்களும், ஒளியும், பகலும் உலக வாழ்வும் இல்லை. அதுபோல் இறையவனின்றி எதுவுமில்லை. ஆதாரம் ஆதேயம் எல்லாம் அவனே.

❁ ❁ ❁ ❁ ❁

முக்குணப் போர்க்களமாகிய உலகில் அழியா மெய்ப்பொருளொன்று நிர்க்குணமாக ஒவ்வொருவர் உள்ளத்தும் வீற்றிருந்து, உடலாகிய தேரை ஓட்டுகிறது, அந்த நித்தியப் பொருளையே நீ என்று அறி.

❁ ❁ ❁ ❁ ❁

தெய்வசக்தியை, மனிதனின் அகந்தையும் அழுக்கும் சுவரிட்டு இருட்படுத்துகின்றன. இவற்றைத் தகர்த்து அன்பினால் இதயக்கதவைத் தட்டித்தட்டி, ஆண்டவனைக் கூவிக்கூவி முறையிட்டால் அருட்கதவு திறக்கும். அவன் இன்பம் சுரக்கும், இதனாலன்றோ ஏசுநாதர், "தட்டுக திறக்கும்; வேண்டுக அருளும்" என்றார்.

பலசமயத்தவர், பலகொள்கையார் தத்தமது மனப்போக்கின்படி பல பான்மையாகச் சொல்லுவர். அனைத்துள்ளும், புறமும் தானே தானாகத்தாக் கற்றிருக்கும் மெய்ப்பொருள் ஒன்றே.

❁ ❁ ❁ ❁ ❁

கடவுள் ஒருவன். ஒவ்வொருவருள்ளும் அவனே ஆன்மா! அவனை வேதம் "அது" என்னும்; அன்பன் "அவன்" என்பான், சாக்தன் "சக்தி" என்பான். சைவம் மூன்றையும் சம்மதிக்கும். அந்த ஒன்றே பலவானது, அதையறியாதவர்கள் சண்டைபோடுகின்றனர்.

❁ ❁ ❁ ❁ ❁

கடவுள் ஒன்று; கட்சி பல. தர்மம் ஒன்று; தர்க்கம் பல; வாய்மை ஒன்று; வாக்குவாதம் பல. சைவம், வேதாந்தம், சாக்தம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், எல்லாம் எதை நோக்குகின்றன? இன்பத்தை! அருட்புலவர் இன்பத்திற்கு அறவழி காட்டினர். மனிதன் மதக்கோட்டைகட்டிச் சண்டை போடுகிறான்.

❁ ❁ ❁ ❁ ❁

கிளைகள் பல; கனி ஒன்று. கனிகள் பல; சுவை ஒன்று; எல்லாம் உண்மையறிவினின்று விரிந்து இன்பங்கனிந்தன. அன்பனே! மதங்கள் பல. நீ எதையும் வெறுக்காதே, எதையும் இதுதான் முழுவுண்மையென்று பற்றாதே. எல்லாமதங்களினும் உயர்ந்த உண்மையுள்ளது, அதையே நீ பின்பற்று.

❁ ❁ ❁ ❁ ❁

மனம் புறஞ்செல்லச் செல்ல வேறுபாடுகள் அதிகரிக்கும். மனம் உட்குவிந்தொடுங்க வொடுங்க ஒருமைப்பாடு தோன்றும். விளக்கைப் பார்த்தாற் பலவாம்; வெளிச்சம்பார்த்தால் ஒன்று உலகைப்பார்த்தால் பல; உள்ளம் பார்த்தால் ஒன்று,

[சுவாமி சுத்தானந்தரின் நூல்களிலிருந்து திரட்டியவை]





சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு
நாவலப்பிட்டி மக்கள் அளித்த

## வரவேற்புப் பாமாலை.

ஓம்சுத்த சக்தி ஓம் சுத்த சக்தி
என்றே உயிர்க்கும் சுத்தானந்தமே!
வருக! வருக!! வரமே தருக!
பெருங்கா தலுடன் பணிந்தோம் அருள்வீர்!
பால வயதில் பாலு வாகி
செல்வமாய் வளர்ந்து செல்ல மாசி
அம்மான் அன்புச் செல்வத்தை யுதறி
ஐந்து வயதினில் அம்பிகை அடியை
அடைக்கலமாக அடைந்தோய் வருக!
சும்மா உலகின் சுமையாய் இராது
அம்மையின் பணியே பணியாக் கொண்டு
எம்மையாள் எந்தாய் வருக! வருக!!
பாடும் பணியே பணியாக் கொண்டு
ஐந்து வயதினில் அம்மையின் அருளால்
அருங்கவி பாடிய ஆனந்த வருக!
ஒன்பது வயதினி லொருவரு மறியா(து)
இன்ப வாழ்வு வாழ வேண்டி
மோன குருவின் வாழ்க்கையோ டியைந்து
மோனமுனிவரின் சக்தியைப் பெற்ற
சுத்தானந்த வள்ளலே வருக
பாரத சக்தி பாப்பாப் பாட்டு
தியான மாலை திருக்குறள் இன்பம்
ஆத்ம சோதனை அர்ச்சனை மாலை
கீர்த்த ஞஞ்சலி கிறித்துவின் நாடகம்
இதுதான் உலகம் இல்லற வொழுக்கம்
கலைக்கோயி லுடனே காலத் தேரும்
கம்பன் கவியும் காளி தாசனும்
அவனும் அவளும் அன்பு நிலையமும்
யோக சித்தி கீதா யோகமும்
பகவத்கீதை பலவினப் பாடலும்
தேசிய கீதம் திருநூல் பலவும்

பாடியருளிய புலவோய் வருக!
அகத்தியன் என்றும் வியாசன் என்றும்
கம்பன் காளி தாசன் என்றும்
வள்ளுவன் பாரதி இளங்கோ என்றும்
அன்று இருந்தனர் இன்று காணோம்
இவரெல்லாம் திரண்டு ஒருரு வாகி
இன்று நம்முன் எவருங் காண
எழுந்தருளி வந்த இறையே போற்றி
நானார் என்னும் ஆத்ம வித்தையை
பகவான் ரமணரின் பண்பா லறிந்து
நானே யற்று நீயே யாகி
சோதிநிலை யெய்திய சுத்தனே போற்றி!
ஆனந்தக் குடிரில் ஆஸ்ரம மமைத்து
ஆன்ம வித்தையை அகிலமும் பரப்பும்
சிவானந்த முனிவரின் சீர்சால் நண்பால்
தில்லையி லோர்நாள் சிவானந் தருடனே
மாலை மாற்றிய மணியே போற்றி!
“அப்பரைப் போலே அன்புப் பணியும்
பாலரு வாயர் போலவுள் ளறிவும்
சுந்தரர் போலே செந்தமிழ்ச் சொல்லும்
இதுபொருள் என்றுனை இரண்டறக் கலந்த
மணிவா சகர்போல் மாசறு காதலும்
அம்மையார் போலே அருளடி நேயமும்
ஔவையார் போலே செவ்விய மதியும்
திருமூ லர்போற் செழுந்தவ யோகமும்
மெய்கண் டார்போல் உய்நெறி விளக்கமும்
பட்டினத் தார்போற் பழுதறு துறவும்
தாயுமா னர்போல் ஆய்ந்தவுள் ளமைதியும்
வள்ளலார் போலே தெள்ளருட் சோதியும்
ஆழ்வார் போலே அடைக்கல வுறுதியும்
சங்கரர் போலே சகசாத்ம சித்தியும்”
உடைய குருவே போற்றி போற்றி
பொன்னடி பணிந்து வரவேற் கின்றோம்
மாவலி கங்கை யாற்று மணலினும்
நீடு வாழ்க நிலமிசை யானே;

# சுத்தானந்தர் இலங்கை விஜயம்

சுவாமிஜியின் சுற்றுப்பிரயாணத் தொடர்பில், இலங்கை இதுவரையில் கண்டும் கேட்டும் இராத நிகழ்ச்சிகள் சென்ற ஒரு மாதகாலமாக நடைபெறுகின்றன. சாதி, மத, சாத்திரகோத்திர பேதம் எதுவுமின்றி எங்கும் ஓர் ஆத்மீகப் புத்துணர்ச்சியின் வேகத்தை அவரின் வருகை கிளப்பியுள்ளதெனலாம்.

அவர்மீது மக்கள்கொண்டுள்ள அன்பிற்கும் ஆர்வத்திற்கும் கீழ்க்கண்ட பாடல்கள் சாட்சி கூறுகின்றன. இவை அவருக்கு வெவ்வேறு இடங்களில் அளிக்கப்பட்ட வரவேற்புப்பத்திரங்களிலிருந்து தெரியப்பட்டவையாகும்.

பிள்ளைப் பெருமான் சம்பந்தர்,
பிஞ்சு வயதிற் கவிபாடிப்
பெற்றி யடைந்தார் என்பதெல்லாம்
பித்தர் சிலரின் பிதற்றலென,

விள்ளற் கரிய அருட்கவியின்
மேன்மை யறியார் தமைப்பிடித்த
வீண்சந் தேகப் பேய்களெல்லாம்
வெருண்டோ டிட,நல் வயதாறில்

உள்ளங் கசிய “அம்மா!“ வென்(று)
ஓங்கா ரத்தை முன்னெழுப்பி
ஒப்பில் மழலைக் கவி, இந்நாள்
உரைத்த அருட்டீங் கவியோகி

எள்ளத் தனையும் பேதமிலா
தெல்லா உயிரும் இறைமேனி
என்னக் கண்டு தொழுதேத்தும்
இன்பத் தூய வருகவே!

கொழும்பு 22-10-52

காண்டற் கினியானே கார்முகிலே சொன்மழையில்
நீண்டசீர்ச் சுத்தனே நீள்புகழே —மாண்டதுண
ஆனந்த பாரதியே! அன்பே! தமிழே! யாம்
ஆனந்தம் கொண்டோம் அணைந்து.

கொழும்பு சகீரா கல்லூரி **23-10-52**

❁ ❁ ❁

சுத்தானந்தச் சுடர் மாமணியே!

சற்குணம் பெற்று, சாத்திரம் கற்று, நிற்குணன் பேரருள் நித்தமும் பெற்று. மாதவம் பெற்ற நன் மகிழ்ச்சியோய் வருக! ஆதவன் எனத்திகழ் அறிவுளோய் வருக! சமயபேதக் கடல் கடந்த, சமத்துவ ஞானச்சுடரே வருக! இமயம் போல நிமிர்ந்து ஓங்கும், இனிய மோன முனி வருக! தமிழர் பல்லாயிரமாண்டுத் தவத்தின் பயனே வருக! வருக! வருக! சீர்வாழ்த்திட வருகவே!!

வெள்ளவத்தை **24:10:52**

❁ ❁ ❁

சத்தியமும் சமாசமும் சமத்துவமும் நிறைந்துமக்கள்
சாந்தமுடன் பூவுலகில் சலன்மற்றுச் சிறந்துவாழ,,
நித்தமும்நீ நினைந்தனையாய் மௌனதவம் புரிந்துஞான
நீதிநிறை அறநூலும் தவநூலும் நிறையத்தந்தே
சித்தமதில் சிவோகம் என்றும் சிவநினைவு நிலைக்கநாட்டி
சீரியசச் சிதானந்த சாந்தமதில் செழிக்கவே "ஓம்
சுத்தசக்தி"எனும்மந்த்ரம் தரும்யோகி சுத்தான்ந்தச்
சுடரொளியே சுகவாழ்வும் சிவன்அருளும் சிறந்துவாழி!

உணுப்பிட்டி **24-10-52**

❁ ❁ ❁

அன்புப் பரிதி வருக! கலை
யறிவுச் சுடரே வருக! தமிழ்
ஆர்வக் கொழுந்தே வருக! உயர்
அறத்தின் நிறைவே வருக! இயல்



இன்பக் கடலே வருக! உளம்
இனிக்கும் தமிழே வருக! புவி
எத்தும் மறையே வருக! தவம்
ஈன்ற தவமே வருக! தமிழ்ப்
பண்ணின் உருவே வருக! புவி
படர்ந்த புகழே வருக! அருள்
பழுத்த கனியே வருக! உயர்
பரம குருவே வருக! எங்கள்
துன்பம் துடைத்தோய் வருக! அருள்
துலங்கும் ஜோதீ வருக! இன்பத்
தூய்மை வடிவே வருக! ஓம்
சுத்தானந்தம் வருகவே!

கொழும்பு விவேகானந்த சபை **25-10-52**

❁ ❁ ❁

மோனத் தலைவா வருக! சிவம் முற்றிப் பழுத்த கனிவருக!
முடியாப் பிறவிக் கடல்நீந்தும் முனியே வருக சாந்தமெனும்
மானக் குன்றி லேறியோளிர் மதியே வருக சைவமகா
சபைசெய் தவமே வருகசிவ மணியே வருக வருகவே!

கட்டளைக்கலித்துறை

பன்னிய நூலுரை காலத்திற் கேற்கும் பதமுணர்ந்து
துன்னுந் தமிழ்ப்பயிர் சோர்வடை யாமல் துளிர்க்கும்வண்ணம்
கன்ன லமுதெனத் தேனெனப் பெய்யும் கவின்முகிலா
மன்னு-சுத் தான்ந்த பாரதி நீடுழி வாழியவே.

கண்டி **27-11:52**

❁ ❁ ❁

அன்பு வடிவே! அறிவாற் பெருங்கடலே!

செந்தமிழால் சீர்வளர்க்கும் செம்மை கண்டோம். பைந்தமிழால் பாவளர்க்கும் பான்மைகண்டோம், புத்தியின் நுட்பம் கண்டோம்; புலமையின் திறமைகண்டோம்: தித்திக்கும்பாலொடு தேன்குழைத்து தீங்கரும்பின் நறும் சாறு சேர்த்ததொத்த முத்தமிழ்நூல்கள் கண்டோம் கன்னலினும் கனிந்த சுவைக்கலைக்கோ

யில் கண்டோம்: உன்னஉன்ன நெஞ்சத்தில்ஊற்றெடுக்கும் உயர் தமிழைக் கண்டோம். அன்பும், அடக்கமும், வாய்மையும், தூய்மையும் கண்டோம். அறிவும், செறிவும், பொறையும், நிறையும் பொய்யா ஒழுக்கமும் கண்டோம், அடிகள் விரும்பும் அன்பின் சன்மார்க்கம் கண்டோம். இறும்பூது எய்துகின்றோம்.

கண்டி தமிழ்ச் சங்கம் 27-10-52

❁ ❁ ❁ ❁ ❁

சாதி, சமய வரம்புகட்கப்பாற்பட்ட சமரசசன்மார்க்க நிலையையடைந்த தூயஞானியே, கலைப்பொக்கிஷமே, கவிக்களஞ்சியமே, ஞானவாரிதியே, நின்வரவு எமக்கெல்லாம் நல்வரவாகுக!

பொற்சுரங்கம், வெள்ளிச்சுரங்கம் மாத்திரமல்ல, ஞானச்சுரங்கமும் மலியப்பெற்றது நம்பாரத நாடு; காலத்துக்குக்காலம் அச்சுரங்கம்தானே வெளிக்கொண்டு உலகை உய்விக்கும் உபதேசங்களைச் சுரந்தளிக்கும்; அந்த ஞானச்சுரங்கத்தின் சிறந்த ஊற்று நீ! உலகெங்கணும் பரந்து சென்று திக்குவிஜயம் செய்துவரும் வீரச்செம்மலே! நின்வரவால் நின்தரிசனத்தால், நாம் தூய்மையடைவோமாக.

பதுளை 30-10-52

❁ ❁ ❁ ❁ ❁

பாரதநாட்டின் தவப்பெரும் புதல்வனே!
சுத்தானந்தப் பெரியோய்!

மோனப் பெருங்கடலில் முகந்தெடுத்த தங்களின் ஞானுங்க அமுத மொழிகள் தேசாவேசக்கனலை எழுப்புவனவாயும் ஆன்ம வீறுடையனவாயும் விளங்குகின்றன. அவை எங்களின் வறண்ட வாழ்வில் செழுமையையூட்டிப் புத்தொளிபரப்பி அன்பையும் ஒற்றுமையையும் அழிவிலா நிதியாக அளிக்கும் என நம்புகிறோம்.

பரிபூரண சிவயோகப் பொலிவில் பூத்து யான்பெற்றஇன்பம் பெறுக இவ்வையகம்? என்னும் ஞானமுரசொலிக்கும் தங்கள் மெய்ஞ்ஞான வீரவாழ்க்கை அவதியுறும் மன்பதைக்கோர் எடுத்துக்காட்டு.

பண்டாரவளை 30-11-52



வெண்பா

செந்தமிழாந் தேமொழியிற் தேசநலன் தாங்கியொளிர்
சிந்தனையின் ஊற்றுதவும் செம்மலையே-நந்தலில்சீர்
அன்புநெறி தந்தருள்சுத் தானந்த பாரதியாம்
இன்புருவே வாழ்க இனிது.

ஹட்டன் 31-10-52

❁ ❁ ❁

வாழிதிரு வைந்தெழுத்து வாழிதிரு வெண்ணீறு
வாழி உலகுயிரும் மாமழையும்—வாழியரோ
செல்வனெங்கள் சோதிசுத் தானந்த பாரதியார்
பல்லூழி காலம் பொலிந்து.

கம்பளை 3-11-52

❁ ❁ ❁

தண்டமிழன்னையின் தவப்புதல்வ!

இமிழ்கடல் வேலிட் தமிழகம் விழங்க
அறத்தோண் டாற்றி யறநெறி வளர்க்கும்
அருங்கலை யரசே பெருந்தவக் குன்றே!
மானிலை மாற்றிய மாண்புறு தவத்தின்
பயனே வருக! பாவல வருக!
புலவரிற் சிறந்த புலமையோய் வருக!
ஆன்றவிந் தடங்கிய சான்றோய் வருக!
சமத்துவ ஞானச் சுடரே வருக!
பந்தந் தவிர்த்த பண்பினோய் வருக!

காலி 6-11-52

❁ ❁ ❁

உலகெலாம் கலையறிவும் அன்பும் பொங்கி
ஒருகுலமாய் மக்களினம் ஓங்கிவாழ்க!
நிலைபெறுநற் சீலமுயர் பொறைகை ணீதி
நீள்கருணை மழைபொழிந்து நிதமும்வாழ்க!

இலகுபுகழ் சிவகங்கை தன்னிற்தோன்றி
“என்கடனே பணிசெய்து கிடப்பதென்ன
நிலவுபுகழ் தவக்கனலே! சுத்தானந்த
நிறைதவமே! நீடூழி வாழ்க!! வாழ்க!!!

அலுத்கம முஸ்லிம் கலாசாலை **7-11:52**

❁ ❁ ❁ ❁ ❁

கன்னித் தமிழ் நாடரசாளும்
கவிஞவருக! முழுஞானக்
கலைச்செங்கோலை யுயர்த்த பெருங்
கனியே வருக! அன்பென்னும்
பொன்னைக் கொடியி லெழுதிய நற்
புகழோய்வருக! அருள் முழக்கம்
புரியும் முரசம் முன்னொலிக்கும்
புனிதா வருக! அறமென்னும்
மின்னற் குடையின் நீழலில் வாழ்
மேலோய் வருக! உபதேச
மென்பொற் புரவி யூர்ந்துசெலும்
விறலோய்! வருக! செஞ்சாலி
மன்னி விளையும் மருதஞ்சூழ்
மட்டக்களப்பு நன்னாட்டில்
வருக சுத்தானந்தப் பேர்
மணியே வருக! வருகவே!

மட்டக்களப்பு **8:11:52**

❁ ❁ ❁ ❁ ❁

சாதி சமய சாத்திரம் கோத்திரம்
சூத்திரம் பாராச் சமத்துவ வானில்
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், எனும்
பழந்தமிழ்த் தமிழன் பண்பெலாம் பகர்ந்து
ஓங்கார வீணையில் ஒரேயுலகை நாட்ட
நீங்காது சகச நிட்டை கூடிச்
சத்தான பொருளெலாம் சாற்றுசுத்தா னந்தஜோதி
எத்திறத் தாசான் அத்திற முவக்கும்



கவிதை கட்டுரை காவியம் நாடகம்
சாத்திரம் சன்மார்க்கம் சாற்று சம்பந்த!
ஆங்கிலம் ஆரியம் பிரான்சு முதலாம்
பன்மொழிப் புலமையால் பைந்தமிழ் வளரத்
தமிழ்நா டுய்யத்தவக் கனல்வளர்த் தோய்வருக!
முத்தமிழ் முனிவ வருக! ஜீவன்
முத்தா வருகஅருட் குருவே வருக!

கல்லடி **8-11-52**

❁ ❁ ❁ ❁ ❁

தாயரம ணானந்த அருட்சோதி
கண்டசெழுஞ் சுடரே!
நேயமகான் அரவிந்தர் நிலைபுகுந்து
மவுனநெறி நிலைத்து நின்றே
ஆயபல கவியமுதும் உரையமுதும்
அன்புகலந் தருந்த வூட்டித்
தேய மெலாந் தமிழ்மதுர மயமாக்குந்
தெளிந்தகலைச் செழுந்தே னாற்றே!

கருவிலுரு வாகிவரு தமிழ்க்கவியே!
கவின் பெறுபொன் மலரில் நீங்கா!
மருவிருந்தா லனைப செஞ்சொல் வளமுடையாய்!
உணர்வுடையாய்! வயங்கு தெய்வத்
திருவிருந்த முகப்பொலிவும் சமநோக்கும்
சாந்தமொடு தெளிந்த வாக்கும்
திருவிருந்தா யெமக்கருள வந்தருள் சுத்
தானந்த திருவே! வாழி!

கழுதாவளை **9-11-52**

❁ ❁ ❁ ❁ ❁

வற்றாத இனியகலை யூற்றே! மண்ணின்
மனிதசமு தாயத்தின் வாழ்வே! வாழ்வின்
முற்றாத இலச்சியமாய் முனைந்து நின்று
முக்குணத்தின் வயமற்றுப் பணியேசெய்து

தற்காலம் பாரதநா டலங்கரிக்கும்
தவயோகி! பாவாணர் அறிஞர் தம்முள்
உற்றாரோ நினைப்போல ஒருவரீங்கு
உள்ளமன்பு வெள்ளமெனக் கண்டதூயோய்.

மக்களுக்காய் உயிர்நீத்த ஏசுநாத
மன்னனது அன்பொளியும் வாய்ந்து புத்தன்
மிக்க நல அருளொளியும் நபிகள் தன்னின்
மேலான கொள்கைகளும் காந்தி அண்ணல்
கக்குதிரு வாய்மொழியும் கலந்தொன்றாகி
காசினியில் தமிழ்த்தவத்தின் உருவம் நிற்குந்
தொக்கமைந்த நீர்மைதனை மக்கள் கண்டு
தூய்மைபெற ஈங்கெழுக சுகுணயோகி!

தேனமுத மெனக்கவிதை பொழியும் வாயன்
தெளிவுபெற உள்ளுணர்ச்சி விளங்குந் தூயன்
வானெழுந்த மதியம்போல் மக்களுள்ளம்
மலர்த்திவரு மெய்ஞ்ஞான விளக்கே பூவில்;
தானெனதென் செருக்கறுத்துத் தவத்தே நின்று
சாரியற்கை உண்மையினில் உறுதிகொண்டு
மோனத்தின் மேன்மைதனைச் காட்டிநின்ற
முத்திநிலத் தெழுமுளையே வளர்க மென்மேல்

கல்முனை 9-11-52

வேதநெறி யொழுக்கமொடு தவவிரதம் மேற்கொண்டு
மாதுயரம் வரினுமனம் மாறாத சமநிலையில்
வேதிசெய்த பொன்போல விளங்கியொளி மிளிர்ந்து மத
பேதமறு மன்புலகு பெறச்செய்தாய் பெருந்தகையே.

நற்சைவ நெறிகாத்த நாவலரு மீங்கில்லை;
முத்தமிழின் நிலைகண்ட முனிவிபுலா னந்தரில்லை;
வித்தகநூல் மொழிஞானப் பிரகாச சுவாமியில்லை;
சுத்ததவ யோகியிங்குன் தொண்டறிந்து போற்றுதற்கே.

காரைதீவு 9-11-52



ஐயனே வருக! எங்கள்
அண்ணலே வருக! உள்ளத்
துய்யனே சுத்தா னந்தச்
சுடரொளி வருக! சாந்த
மெய்யனே வருக! ஞானம்
விஞ்சி யோய் வருக! அன்புச்
செய்யனே வருக! ஈழம்
செய்தவப் பயன் வருக!

அமுதொழுகும் திருமுகமும் அருள் கன்லும்
சுடரொளியும், அரிய ஞானத்
தமிழொழுகும் செவ்விதழும் தவக்கனல்பட்
டொளிதவழும் தளிருடம்பும்,
இமையவர்கள் தொழுதிறைஞ்சும் இன்பச்சே
வடியிணையும், இலங்கத் தூய
தமிழகத்தே தமிழ்ப்பணியால் உலகாள்சுத்
தானந்தத் தகையே போற்றி!

அக்கரைப்பற்று 9-11-52

பல்லவி

வர வேணுமே தருண மிதுவே
அருள் வாழ்வு வாழும் தவயோகி நீரே - வர

அனுபல்லவி

இருள்சூழ் உலகில் இன்பஜோதி வீசும்
பருதியாக வந்த பரமபக்தன் நீரே - வர

சரணம்

துன்பமாய லோகத் துயரெலாம் துறந்து
தூற்றும் சாதி சமயப் பேதமும் மறந்து
அன்பு மார்க்க முரசும் அவனியெங்கும் அறைந்து
அகில லோகம் வென்றாய் அறிவின் நிறைவே —வர

முத்தமிழ் தனக்கே புத்துயிர் நீ தந்தாய்
சத்திய சன்மார்க்கச் சாதனையில் வென்றாய்
சுத்தசக்தியருளின் சுடரைநாடி நின்றாய்
எத்தனை கலைகள் அத்தனையும் கற்றாய் — வர

முஸ்லிம்பாடசாலை அட்டாளைச்சேனை 10-11-52

❁ ❁ ❁ ❁ ❁

## சன்மார்க்க சமரச ஞானி!

பண்டை நற்றவத்தால், பரமனைப் பத்திபண்ணும் தொண்டு அல்லாமல், மெய்த்தொண்டில்லை என்று கருவில் உருவாகும் போது கருதியவாறே, அவனியில் தோன்றி, வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பி, தாழ்வெனும் தன்மையோடு, சன்மார்க்க சமயஞ்சார்ந்து, சகலகலைகளையும் சுத்தசக்தியால் உணர்ந்து, வள்ளலார், தாயுமானர், காந்திபடிகள் வகுத்த சமரச சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்து, சாதிசமய தேசபேதமின்றி, உலககுருவென உத்தமர்யாரும் மெத்தவும் போற்றத் திக்விஜயஞ்செய்வித்த ஓம் சுத்தசக்தியின் பெருமைகளை எண்ணி எண்ணி அளவிலா இறும்பூது எய்துகின்றோம்.

சம்பாந்துறை 10-11-52

❁ ❁ ❁ ❁ ❁

அன்பின் வடிவே நீ வருக! ஆரப்பருகுங் கவி வருக
இன்பத்தேனே யிவண்வருக எங்கள் ஞானப் பழம்வருக!
என்புயிர்பெற் றெழச்செய்த இளமைத் தமிழின் சுடர்வருக
மன்னும் புகழ்சுத் தானந்த வள்ளால் மகிழ்ந்து வருகவே!

பாடிப்புகழ்ந்து பலதரமுன் பாதம் பணிந்து பக்தியுடன்
ஆடிச்சிறந்து யாபேரும் அமரத்தன்மை பெற்றுய்ந்தார்
நாடற்கென்றே வானுலகை நாட்டவந்தாய் பாரதியே!
கூடிக்கலந்து மக்களெல்லாங் குலமோன் றகிவாழ்வாரே.

சொல்லிச் சொல்லிப் படித்திடுவோஞ் சுத்தானந்தர் நூலென்று
அல்லும்பகலு மன்பரெல்லாம் அருமையோகி என்றார்ப்போம்
கல்லுங்கரையுந் தீந்தமிழைக் காக்கவந்த கவியென்போம்
வெல்லுந்தமிழ்ப் பேரிகையென்னும் வீரச்சுத்தானந்தரையே!

மண்டூர் 10-11-52



# உள்ளமும் - உடலும்

சரஸன்

இந்த உலகம் பலவிதமான வெளிவேஷங்களுக்கு இடமளிக்கிறது. நன்மை எது? தீமை எது? என்று கண்டுகொள்வது சுலபமாயில்லை. பலர் வெளித்தோற்றத்திலே நாஸ்திகர் போலக் காணப்படுகிறார்கள். ஆனால் ஆராய்ந்துபார்க்கும்போது பரிபக்குவமடைந்த ஞானியாகத் தோற்றமளிக்கிறார்கள். வேறு சிலர் வெளிப்பார்வைக்கு பரம ஆஸ்திகர்களாய்க் காணப்படுகிறார்கள். திரைமறைவிலே அவர்கள் செய்யும்அக்கிரமங்களுக்குஅளவில்லை.

நாம் கடவுளை அடையவேண்டுமானால் நம் உள்ளத்தை அவன்பால் முழுமனதுடன் செலுத்திப்போற்றவேண்டும். வெறும் புறவேஷங்களால் கடவுளை அடையவிரும்புவது மடமையாகும். இந்தத் தத்துவத்தை பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் வெகுஅழகாய் ஒருகதைமூலம் விளக்குகிறார்.

எல்லோரும் போற்றும் ஒருயோகி இருந்தார். அவருடைய ஆச்சிரமத்திற்கு அருகில் ஒரு தாசி வசித்தாள். ஒருநாள் யோகியின் கவனம் தாசியின்மீது சென்றது. அவள் செய்யும் கேவலமானசெயலைக்கண்டு மனம் நொந்தார். தாசியைக்கூப்பிட்டு "ஏ தாசி, உன் வாழ்க்கையை இம்மாதிரிப்பாபச்செயல்களில்கழிக்கிறாயே. ஏன் இந்தப்பாபச் செயலைச் சுமக்கிறாய்"? என்றார்:

தாசி உண்மையில் வருந்தினள். தன் செயல் பாபம் என்பதை அவள் உணர்ந்தாள். எனினும் தன் வாழ்க்கையை நடந்த இந்தத்தொழிலைத்தவிர வேறுமார்க்கம் அவளுக்குக் கிடைக்கவில்லை. எனவே மேலும் தன் தொழிலையே தொடர்ந்து நடத்தினள். ஆனால் தான்செய்யும் பாபச்செயலுக்காக தினமும் கடவுளையே வேண்டினாள். உடல்பாபச்செயல் புரிந்திடினும் உள்ளம் மட்டும் தினமுங்கடவுளையே வேண்டியது.

தன்போதனையினால்மாறாத தாசியைக்கண்ட யோகி அவள் வீட்டுக்கு வந்துபோகும்நபர்களைக் கணக்கிடலானார். ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு கல் வீதம் எண்ணினார்.

ஒருநாள் மீண்டும் தாசியைக்கூப்பிட்டு "பெண்ணே! உன் பாபமூட்டையின் எண்ணிக்கையைப் பார். இதோ இந்தக் கற்கள் கூறும், மறுஉலகத்திலே இத்தனைக்கும் நீ நியாயம் சொல்லவேண்டியிருக்கும் என்பதை மறவாதே," என்றுகூறினர்.

தாசி கற்குவியல்களைக் கண்டு நடுங்கினள். தான் இத்தனை பாபச்செயல்கள் புரிந்துவிட்டேன் என்று திகிலடைந்தாள். தன் இருப்பிடம் வந்து ஆண்டவனை உள்ளம் உருகவேண்டிக்கண்ணீர் வடித்தாள். "ஆண்டவனே! நான் இத்தனை பாபச்செயலைப்புரிந்துவிட்டேனே! என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள மாட்டீரா? என்மீது இரக்கம் காட்டமாட்டீரா"? என்று கதறினள்.

கடவுளின் செவியில் அவளுடைய கதறல் கேட்டது, அவருடைய தூதர்கள் வந்து அவள் உயிரைக்கொண்டு போனர்கள். அவள்பாப உடல் தரையில் சாய்ந்தது. அதேசமயம் அந்த யோகியின்உடலும் சாய்ந்தது. ஆனல் அவர் உயிரை யம தூதுவர்கள் தான் கவர்ந்துசென்றார்கள்.

யோகி கதறினர். "நான் யோகியாயிற்றே! கடவுளின் பக்தன் ஆயிற்றே. என்னையேன் நீங்கள் அழைக்கிறீர்கள்? அதோ அந்தத்தாசியையல்லவோ நீங்கள் கூட்டிப் போகவேண்டும். இது என்ன அநியாயம்!"

தாசியின் ஆவியை எடுத்துச்சென்ற ஆண்டவன் தூதர்கள் சொன்னர்கள். யோகி! ஆண்டவன் நியாயவாதியே. உன் எண்ணமே உன்னைக் கெடுத்து விட்டது. வெளிவேஷத்திலும் ஆடம்பரத்திலும் காலத்தைக் கழித்தாய்; நீ யோகியென்றபெயரை வைத்துக் கொண்டு, தாசியின் செயல்மீது உன் காலத்தையும் உள்ளத்தையும் செலவிட்டு ஆண்டவனை மறந்தாய். ஆனல் இந்ததாசி தன் உள்ளத்தால் ஆண்டவனைப்பேணி தன் பாபச்செயலுக்கு மன்னிப்புத்தேடினள், இவளுடைய உடல் பாபச்செயலைப்புரிந்தாலும் உள்ளம்ஆண்டவனைத்தான் சதாநினைந்து உருகிக்கொண்டிருந்தது. ஆகையால் இவள் ஆண்டவன் திருவடியை அடைகிறாள் அதோ கீழேபார். உன் உடல்செய்தபுண்ணியத்தினல் உன்உடலை உன் சிஷ்ய கோடிகளும் பக்தர்களும் ஆடம்பரத்துடன் சுமந்துசெல்கிறார்கள்: ஆனல் இந்தத் தாசியின் உடல் செய்த பாபத்தினல் அவள் உடலைக் கழுகும் காக்கையும் கொத்தித்தின்கின்றதைப்பார்.

ஆகவே, யோகி! பாபபுண்ணியங்கள் உள்ளத்தின் சுத்தியால் ஏற்படுகின்றன என்பதைஞாபகத்தில் வைத்துக்கொள், தாசியின்உள்ளப் செய்த புண்ணியத்தால் அவள் ஆண்டவனை அடைந்தாள். அதே சமயம் யோகியின்உள்ளம் புரிந்த பாபச்செயலால் அவர் நரகத்தில் வீழ்த்தப்பட்டார்:




# சுவாமி சுத்தானந்தரின்

உயரிய இனிய

செந்தமிழ்

நூல்கள்.

| | ரூ. ச. |
|---|---|
| அர்ச்சனை மாலை | |
| சுவாமிகள் படத்துடன் | 50 |
| அன்புவழி | 70 |
| அரவிந்தப்பிரகாசம் | 2-75 |
| ஆத்மஜோதனை சுவாமிகளின் விரிவான இனிய சுயசரிதம் | 6-25 |
| இதுதான் உலகம் | 8-25 |
| அருட்செல்வம் | 2-25 |
| தியானமாலை சுவாமிகள் படத்துடன், அருட்பெரும் வசன நூல் | 1-75 |
| பைந்தமிழ்ச் சோலை | 70 |

| | ரூ. ச. |
|---|---|
| கீர்த்தனாஞ்சலி | 3-75 |
| நவரச நடனாஞ்சலி | 2-25 |
| கவிக்கனவுகள் | 1-65 |
| தமிழ்க்கனல் | 1-10 |
| யோகசித்தி மூலம் | 30 |
| இல்லறவொழுக்கம் | 30 |
| பாப்பாப்பாட்டு | 55 |
| கஸ்தூரி | 55 |
| வானரசு ஓரங்க நாடகம் | 60 |
| இவளும் அவளும் „ | 55 |
| சுவாமிகள் போட்டோபடம் | . |
| பெரியசைஸ் | 3-75 |

மு. உ,

முருகேசபிள்ளை

அன் சன்ஸ்,

"சரவண அச்சகம்"

நாவலப்பிட்டி. (இலங்கை)

போன்: 329

## திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய
(வித்தியா பிரசுரசபையால் அங்கீகரிக்கப்பெற்றது)

**கணிதங்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இரண்டாந்தரக் கணிதம் | ... | விலை | ரூ. | 1-20 |
| 2 | மூன்றாந்தரக் கணிதம் | .... | விலை | ரூ. | 1-40 |
| 3 | நான்காந்தரக் கணிதம் | .... | விலை | ரூ: | 1-50 |
| 4 | ஐந்தாந்தரக் கணிதம் | .... | விலை | ரூ. | 1-80 |
| 5 | ஆறாந்தரக் கணிதம் | .... | விலை | ரூ, | 1-75 |
| 6 | ஏழாந்தரக் கணிதம் | .... | விலை | ரூ. | 1-75 |
| 7 | பாடிகணிதம் | ... | விலை | ரூ. | 3-00 |

**மனக்கணிதங்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இரண்டாந்தர மனக்கணிதம் | ... | விலை | 50 | சதம் |
| 2 | மூன்றாந்தர மனக்கணிதம் | ... | விலை | 50 | சதம் |
| 3 | நான்காந்தர மனக்கணிதம் | .... | விலை | 60 | சதம் |
| 4 | ஐந்தாந்தர மனக்கணிதம் | .... | விலை | 70 | சதம் |

**பூமிசாஸ்திரங்கள்:**

(வித்தியா பிரசுரசபையாரால் அங்கீகரிக்கப்பெற்றவை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இரண்டாந்தர பூமிசாஸ்திரம் | ... | விலை | 60 | சதம் |
| 2 | மூன்றாந்தர பூமிசாஸ்திரம் | ... | விலை | 70 | சதம் |
| 3 | நாலாந்தர பூமிசாஸ்திரம் | .... | விலை | ரூ | 1-00 |
| 4 | ஐந்தாந்தர பூமிசாஸ்திரம் | .... | விலை | ரூ. | 1-25 |
| 5 | ஆறாந்தரபூமிசாஸ்திரம் | [அச்சில்] | | | |

**இதர நூல்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ் அக்ஷரகணிதம் | (புதியபதிப்பு) | விலை | ரூ. | 2-50 |
| 2 | தமிழ் கேத்திரகணிதம் | [கைவசமில்லை] | அச்சில் | | |
| 3 | மாலைக்கு மாலை | [கவிதைத்தொகுதி] | விலை | ரூ. | 2-50 |
| 4 | கவிதைக்கன்னி | ,, | விலை | ரூ | 2-00 |
| 5 | பாலர் கீதம் | | விலை | 80 | சதம் |
| 6 | கண்ணன் பாட்டு | | விலை | 30 | சதம் |
| 7 | எஸ் எஸ், ஸி வீரமாநகர் இலக்கியகுறிப்பு | | | ரூ. | 2-00 |

பிரசுரம்:

வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை,

Publishers.

The North Ceylon Book Depot,

Main Street, : : Point Pedro



## சக்தியை பெறும் வழி

(சுவாமி சித்பவானந்தர்)

### இச்சாசக்தியை வளர்த்தல்

முற்றொடர்ச்சி

நாம் கொண்ட குறிக்கோள் எதுவாயினும், அதனை அனுபவ வாழ்க்கையில் அடையக் கருதுபவன் அக்குறிக்கோளின்மீது ஆசையை நாடோறும் பெருக்கிவரவேண்டும். ஆசை எவ்வளவிற்கு வலுத்துவருகிறதோ அவ்வளவிற்கே நாம்முன்னேற்றமடைவோம. ஆதலின் நமது இலக்ஷியத்தின்மீது ஆசை அளவிலாது வளர்ந்து, உலகத்தார்நம்மைப் பைத்தியக்காரர் என்று சொல்ல தொடங்கும்வரையும், அதன் பின்னும், கொழுந்து விட்டெரியும் பெருநதியைப்போன்று பேணப்படுதல் வேண்டும். நமது இலக்ஷியத்தைப் பெறுதற்காக ஒவ்வொரு நிமிடமும் பாடுபடும் திறமையை இவ் ஆசையே அளிக்கும். ஆசைமட்டும் ஒருவர்க்கு உண்டாயின், அதனை நிறைவேற்றுதற்கு ஏற்ற சமயங்கள் தாமாகவாழ்க்கையில் வந்து வாய்க்கும். ஆசையெனும் சக்தி அத்தகைய சமயங்களையும், அது நிறைவேறுதற்குத் துணையாக அமையக்கூடிய மனிதர்களையும் பொருள்களையும் தன் பக்கத்துக்கு இழுக்கும் தன்மையுடையது, ஆசைப்படும் பொருளுக்காக ஒருவன் துடிப்பானாயின், அதனைப்பெற்றாலன்றி உயிர்வாழேன் என்னும் நிலையை ஒருவன் அடைவானாயின், அப்பொருள் இவ்வுலக பொருளாயினும் சரி, வேறு உலகத்துள்ள பொருளாயினும்சரி, அழியாத பரம்பொருளே ஆயினும்சரி, அதனைப்பெறுதல் திண்ணம். ஆசை நாமறியாமலே நம்மிடத்துள்ள ஆற்றல்களையெல்லாம் ஒருமுகப்படுத்துகிறது. எவ்வித மஹத்தான இடையூறுகளையும் பொருட்படுத்தாத மனநிலையை அளிக்கின்றது. "மெய்வருத்தம் பாரார் அவமதிப்புங்கொள்ளார். கருமமே கண்ணாயினார்" ஆசை தீவிரமாகும்போது சிரத்தையென்பது நம்மிடத்துக் குடிகொள்ளுகின்றது. நமது மனமும் சொல்லும் செயலும்

ஒரே தன்மையனவாகி ஒரு பொருளைக் குறித்தே பாய்கின்றன. ஆசை பெருக்கத்தை விளைவிக்கின்றது. ஆசையுள்ள விடத்து உழைப்பும், பொறுமையும் தாமாகவந்து சேர்கின்றன.

நீர்க்குள் மூழ்கி இருப்பவன் மூச்சுக்காக எப்படித் திணறுவானோ, அம்மாதிரி ஒருவன் தனது இலக்ஷ்யத்தை அடையத்துடிப்பானாயின் அது கைகூடிவிடும். இதற்கு உதாரணங்கள் பெரியாரது வாழ்க்கைச் சரித்திரங்களிலிருந்து எடுத்துரைப்போம்.

நெப்போலியன் என்னும் போர்வீரர் தமது இளமையில் இராணுவப் பள்ளிக்கூடம் ஒன்றிற் கல்வி பயின்றுகொண்டிருக்கும் போது, வறுமையின் கொடுமையினால் மிகநசிந்த அவரது அன்னையார் தம்மையும் தமது செல்வக்குழந்தைகளையும் பசிப் பிணியினின்றும் காத்துக்கொள்ளப் பெரும் பொருள் வேண்டுமென ஒரு நிருபம் வரைந்து விடுத்தனர். அதனைக்கண்ணுற்ற சிறுவர் தம்மிடம் பொருளில்லாமல் உணர்ந்தும், எவ்வாறாயினும் பொருளை அனுப்பும் கடமையை நன்குணர்ந்தும், யாது செய்வது என்பதைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார். பொழுது கழிவதையும் அறியாது நெடுநேரம் சிந்தனையில் மூழ்கியபின், தமது உள்ளத்து அன்னையார்க்குப் பொருள் அனுப்பல் வேண்டும் என்னும் ஆசை அடக்கவொண்ணாதபடி பிடித்து உந்தவும், அதனைநிறைவேற்றும் வழியினைக் காணாராய்ப் பித்துக்கொண்டவர் போல நள்ளிரவில் "இனி நான் உயிர்வைத்துப் பயனென்?" என்று தம் முயிரை மாய்க்கும் பொருட்டுக் கடலை நோக்கி ஓடினார். வெறிகொண்டு தற்கொலை பண்ண ஓடும் அவரைக்கண்ட ஒரு நண்பர் அகக்கருத்தை முகக்குறிப்பினாலறிந்து அவரது செயலின் காரணத்தை வினவினார். நெப்போலியனும் மெய்ம்மறந்து தமது கவலையை உரைத்தலும் அக்கணமே அவர் நூற்றுக்கணக்காகப் பொருளீந்து அன்னையர்க்கு அதனை அனுப்புமாறு வேண்டித் தமது வழியே சென்றனர். நெப்போலியன் தனது நண்பரை இன்னாரென்றும் அறியாதவராய்ச் சரேலென்று இருப்பிடம் திரும்பி, அதை அனுப்ப ஏற்பாடு செய்தனர்.

புகழ்பெற்ற பாரத நாட்டு மெய்ஞ்ஞானியரில் ஒருவராகிய ஸ்ரீ சுவாமி ராமதீர்த்தர் மாணவராக வாழுங்காலத்து ஒரு நாள்



ஆறு அரும் கணக்குகளை இரவிற்குள் செய்து முடிக்கும் பேராவலோடு உட்கார்ந்தார். நள்ளிரவிற்குள் ஐந்தும் முடிந்துவிட, ஒன்று மட்டும் தீர்த்தற்கு எஞ்சியிருந்தது. பித்தரைப் போல அதில் ஈடுபட்டிருந்தவர் திடீரென்று கிழக்கே திரும்பவும் சூரியோதயம் ஆவதைக்கண்டு, தமது சபதப்படி தம்முயிரை வாளால் மாய்க்க எத்தனித்தார். வாளின் கூரியமுனையைக்கழுத்தில் வைத்து அழுத்தும் சமயம் திடீரென அவரதுகண்முன்பே வகையுடன் கணக்கைத் தீர்த்து எழுதியிருந்தகாட்சி பளீரென்று தென்படலாயிற்று; வாளும் நழுவி வீழ்ந்தது. இம்மாதிரியே தேவியைக்காணத் துடித்துக் கொண்டிருந்த ஸ்ரீ ராமக்கிருஷ்ணரும் ஒருநாள் ஆசை அளவு கடந்து பெருகியபோது அது நிறைவேறாததை நினைத்து தம் முயிரைமாய்க்கத் தலைப்பட்டனர்; ஆனால்: அங்ஙனம் செய்யத் தொடங்க எத்தனித்தும் தேவியார் பேரின்பக்காட்சியை அளிக்கலாயினர். ஒரு இலக்ஷியத்தை அடைதற்கு ஒரு மனிதனுக்குவேண்டிய ஆசையின் அளவிற்கு எல்லை இதுவென இம்மூவரும் தெரிவித்தனர். ஆசையின் உண்மையான பெருமை இதனால் உணரப்படும்.

## ஆசையை வளர்க்கும் வழி.

மேற்கூறிய உயர்ந்த அளவு கடந்த ஆசைஒருவர்க்கு உண்டாகுமாயின், நாடிய பொருள் எதுவும் கைகூடும் என்றாலும்; அத்தகை ஆசை எளிதே ஒருவர்க்கு உண்டாவதில்லை. ஆசையும் ஏனைய உலக சம்பந்தமான எதையும் போல ஓரிடத்தே நிலைத்து நிற்பதில்லை. நமக்கு வேண்டிய பொருளின்கண் ஆசை உண்டாவதில்லை. பலசமயங்களில் நமக்குவேண்டிய பொருள்களின்கண் ஆசைஉண்டாவதில்லை. பலசமயங்களில் நமக்கு வேண்டாததொன்றிலேயே ஆசைபெருகுகின்றது; இது ஒரு பேருண்மையே என்பதில்ஐயமில்லை. ஆயினும், ஆசையை உண்டுபண்ணுதற்கும் மெல்லமெல்ல அதை வளர்த்தற்கும் வழிஉண்டு. ஆசைஉண்டாகும் காரணத்தைக் கீதையில் பகவான் பின்வருமாறு அருளிச் செய்துள்ளார்.

அடுத்த இதழில் முடியும்;

யாழ்ப்பாணப்பகுதியில்

# யோகிஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின்

## நிகழ்ச்சித்திட்டம்.

**19-11-52 புதன்:**

மாலை 4-00 மணி நாவலர் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகரமண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லுதல், மாலை 5-00மணி யாழ்ப்பாணம் நகரசபையின் வரவேற்பும் பொதுஜனவரவேற்பும். மாலை 6-45 சைவபரிபாலன சபையினரால் நாவலர் மண்டபத்தில் வரவேற்பு, நாவலர் படத்தை யோகியார் திறந்துவைத்தல்.

**20-11-52 வியாழன்:**

காலை 8-30 யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி. மாலை 4-00 மணி கொக்குவில் இந்துக்கல்லூரி. மாலை 5-00மணி மானிப்பாயில் வரவேற்பு, மாலை 6-30மணி வட்டுக்கோட்டை சுலட்டியில் வரவேற்பு.

**21-11-52 வெள்ளி:**

காலை 8-30 வண்ணார்பண்ணை இராமக்கிருஷ்ணமிஷன் வைத்தீஸ்வர வித்தியாலயம். காலை 9-20 வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரி, மாலை 4-00மணி சாவகச்சேரியில் வரவேற்பு. மாலை 5-30 சரசாலை செல்லல். மாலை 7.00மணி வில்லூன்றிப்பிள்ளையார் கோவிலிற் பிரார்த்தனைக்கூட்டம்.

**22-11-52 சனி:**

காலை 8-மணி யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கம். காலை 9-00மணி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் வடஇலங்கைத் தமிழ் ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் வரவேற்பு. மாலை 4-00 மணி குரும்பசிட்டி சன்மார்க்கசபை வரவேற்பு. மாலை 5-30 ஏழாலை மடம் செல்லல்; மாலை 6-15மணி தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் வரவேற்பு.

**23-11-52 ஞாயிறு:**

காலை 8-00 மணி யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை. காலை 9-00மணி யாழ்ப்பாணம் பரமேஸ்வரக்கல்லூரி. மாலை 3-30 பலாலி அரசினர் கல்லூரி: மாலை 4-30 மாதகல் வரவேற்பு. மாலை 6-00மணி பண்ணாகம் வரவேற்பு.

**24-11-52 திங்கள் மௌனம்**

**25-11-52 செவ்வாய்:**

காலை 8-30வதிரி வரவேற்பு. காலை 9-15 பருத்தித்துறை இந்துமகளிர் கல்லூரி. நண்பகல் செல்வச்சந்நிதியில் ஓய்வு மாலை 4-00மணி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மாலை 4-45 பருத்தித்துறை வரவேற்பு. மாலை 6-15 வல்வெட்டித்துறை வரவேற்பு.

**26-11-52 புதன்:**

காலை 8-30 சுன்னாகம் "ஈழகேசரி" நிலையத்துக்குச் செல்லல், காலை 9-00மணி சைவ ஆங்கில வித்தியாசாலை. காலை 9-45 மருதனைமடம் இராமநாதன் கல்லூரி. மாலை 4மணி இடைக்காடு. மாலை 5-00மணி உரும்பராய். மாலை 6-00மணி நீர்வேலி வரவேற்பு.

**27-11-52 வியாழக்கிழமை:**

காலை 7-00மணி கீரிமலை, மாவிட்டபுரம். காலை 8-00 மணி காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை. காலை 8-30 காங்கேசன்துறை நடேசுவரக் கல்லூரி, காலை 9-15 காங்கேசன்துறை சுகஸ்தானத்திற் பிரார்த்தனைக் கூட்டம். மாலை 4மணி ஊர்காவற்றுறை புரி. அந்தோனி கல்லூரி மாலை 4-30 கரம்பன் வரவேற்பு. மாலை 6-30 காரைநகர் நடராஜா மண்டபத்தில் வரவேற்பு.

**28-11-52 வெள்ளி:**

காலை 9-00 மணி ஸ்கந்தவரோதய கல்லூரி, மாலை 4 மணி சண்டிருப்பாய் சைவாங்கில வித்தியாசாலை. மாலை 6-30 அளவெட்டி சைவ மகாசன சபை வரவேற்பு:

**29-11-52 சனி:**

காலை 9-00மணி புங்குடுதீவு, நுணுக்கல் செல்லல். காலை 9-30 புங்குடுதீவு வரவேற்பு. மாலை 4-30 இணுவில் வரவேற்பு, மாலை 6-00 மணி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் பக்திப்பாடல்.

**30-11-52 ஞாயிறு:**

காலை 9-00 மணி அனலைதீவு வரவேற்பு: மாலை 6-00 நாகபூஷணி அம்மன் கோயிற் பிரார்த்தனைக்கூட்டம்,

**1-12-52 திங்கள்**

மாலை 3-00 மணி ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்தின் ஆண்டு விழா. வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்

**2-12-52 திங்கள்:**

மாலை 6-30மணிக்கு புகையிரதமார்க்கமாகக் கொழும்புக்குப் பிரயாணம்

ச அம்பிகைபாகன்; — க. குருசாமி, தலைவர்
சே. விசாகப்பெருமாள்
செயலாளர்கள்

[வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம் 7-11-52]

# ஆத்மஜோதி நேயர்கட்கு

## ஓர் விண்ணப்பம்.

5-ம் ஆண்டு முதற் சுடர் உங்கள் கைக்கு வந்துவிட்டது. நீங்கள் குறிப்பிட்டபிரகாரம் சந்தாப்பணம் அனுப்பி வைக்கத் தவறினாலும் சோதி உங்கள் வீட்டைத்தேடிவந்து விட்டது. வீடுதேடிவந்தவருக்கு ஏற்றமரியாதை செய்ய வேண்டியது கடன் அல்லவா? எப்படி மரியாதை செய்வது? சந்தா அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி வைத்தால் அதுவே சோதியைக் கனப்படுத்தியதாகும். சோதிமேல் அன்புஇருக்குமேல்உங்கள் நண்பர்களுக்கும்அறிமுகம்செய்து வைப்பீர்களாக. டிசெம்பர் 10-ந்தேதிக்கிடையில் எல்லோருடைய சந்தாக்களையும் எதிர்பார்க்கிறோம். அதற்கிடையில் பணம் அனுப்பிவையாதோருக்கு மார்கழிச்சுடர் வீ-பி மூலம் அனுப்பநேரிடும்.

ஆத்மஜோதி நிலயம்
நாவலப்பிட்டி. — (சிலோன்)


## ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்

(1921-ம் ஆண்டில் இருந்துவெளிவருகிறது)

- தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் தமிழ்மக்கட்கேனச் சமயத்தொண்டு புரியும் மாதப்பத்திரிகை.
- பண்டிதரும் பாமரரும் இன்புறக்கூடியது.
- பேரன்பு, மெய்யறிவு, துறவு, ஆற்றல், சமரசநோக்கு, அன்பர்பணி முதலான உயர்நோக்குகளை வாசிப்போரது உள்ளத்தெழுப்புவது.

வருடச்சந்தா ரூபா 4. தனிப்பிரதி சதம் 50.

ஒவ்வொருதொகுதியும் தைமாதத்திலிருந்து தொடங்குகிறது.

ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் மைலாப்பூர், சென்னை 4.


சரவணா அச்சகம், நாவலப்பிட்டி.